Sri M. KALYANASUNDARAM : 1953–54-ம் வருஷத்திய முதல் அப்பீல்கள் கூட இப்பொழுதுதான் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன என்பது அவ்வளவு திருப்திகரமான நிலைமையாக கருதப்பட முடியாது ஆகையால், இப்பொழுது இருக்கும் நீதிபதிகள் போதுமான அளவு இருக்கிறார்களா அல்லது அதிகப்படியானவர்கள் நியமிக்கப்படுவதற்கு அவசியம் இருக்கிறதா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : 1953–54-ம் வருஷத்திய கேஸ்கள் முடிந்து அதற்குப் பின்னால் இருக்கும் கேஸ்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பது என்பது திருப்திகரமான அளவுதான். ஆனால் தவிர்க்க முடியாத காரணங்களால் சில கேஸ்களில் தாமதம் ஏற்பட்டிருக்கலாம். ஹைகோர்ட் நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதா என்ற விஷயமும் அவ்வப்போது கவனிக்கப்பட்டு, வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

Sri M. C. MUTHUKUMARASWAMY : நீதி மன்றங்களில் கிரிமினல் கேஸ்களை எவ்வளவு காலம்வரைதான் நீடிக்கலாம் என்ற வரையறை குறிப்பிடப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அப்படி வரம்பு ஒன்றும் இல்லை. ஆனால் நான் முன்பே சொன்னேன், கிரிமினல் கேஸ்களைப் பொறுத்தமட்டில், தாமதமே கிடையாது என்று.

Sri M. P. SUBRAMANIAM : சென்னை உயர் நீதி மன்றத்தில் இரண்டு ஜட்ஜுகள் நியமிக்கப்பட வேண்டுமென்று செய்தி வந்தது. ஏற்கெனவே நியமிக்கப்பட்டவர்களை அது குறிப்பிடுகிறதா ? அல்லது இனி நியமிக்கப்பட போகிறவர்களைக் குறிப்பிடுகிறதா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நியமிக்கப்பட்டதைத்தான் அது குறிப்பிடுகிறது.

Sri S. NAGARAJA MONIGAR : வழக்குகள் தாலுகா ரீதியில் ஆரம்பமாகி, ஜில்லாக் கோர்ட்டுகளுக்குச் சென்று, அங்கிருந்து சென்னை உயர் நீதி மன்றத்திற்கும், அதிலிருந்து டில்லி சுப்ரீம் கோர்ட்டு வரையில் அப்பீல் போகும் நிலைமை எந்த விதத்திலேயாவது மாறி, கீழ் கோர்ட்டிலேயே நிரந்தரமான முடிவு காண வகை செய்யப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அப்பீல் செய்ய வேண்டிய அவசியம் இருந்தால், அதைத் தடுப்பது சரியல்ல. இருந்தாலும், கனம் அங்கத்தினர் குறிப்பிடும் யோசனை இந்தச் சட்ட மன்றத்தின் யோசனையாக இருந்தால் நிலைமை மாற்றப்படலாம்.

Sri M. KALYANASUNDARAM : பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்கு அதிக அதிகாரம் கொடுப்பதுபற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இப்பொழுது உள்ள அதிகாரங்களுக்கு மேல் அதிக அதிகாரங்களைப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்குக் கொடுப்பதாக இப்பொழுது யோசனை ஒன்றும் இல்லை.

White Paper on Education

* 263 *Q.*—**Sri S. LAZAR** : Will the Hon. the Minister for Finance be pleased to place on the Table of the House a statement containing the decisions taken by the Government of the various recommendations of the Legislature Committee made in its report on the White Paper on Education as adopted by the House during the last session; and to state when they will be implemented?

10th March 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government have accepted the recommendations of the Legislature Committee and have made arrangements for their implementation from the next school year. The change-over to the new pattern will commence in the first three standards in the next year as per revised syllabus already published.

SRI N. K. PALANISAMI : வெள்ளை அறிக்கையின் மீது விவாதம் நடந்த காலத்தில், நிதி அமைச்சர் அவர்கள் ' அதில் இருக்கும் குற்றங் குறைகளையெல்லாம் நாங்கள் ஆலோசித்து மறுபடியும் இந்தச் சபை முன் வரும், அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம் ' என்று சொன்னார்கள். ஆனால், சபைக்கு இன்னும் வராமலேயே சிபார்சுகள் உடனடியாக அமுலாக்கப்படுவதற்கு ஏன் உத்தரவு செய்யப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. சட்டசபைக் கமிட்டியின் அறிக்கை இங்கே விவாதிக்கப்பட்டு, அதை சபை ஒப்புக்கொண்டதற்குப் பிறகுதான் இந்த நடவடிக்கைகள் பூர்த்தியாக எடுக்கப்பட்டிருக்கின்றன.

Burial grounds

* 264 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Works be pleased to state the action taken so far to provide the Harijans of Karnavoor village, Tindivanam firka, Nadukkupam village, Akshikadu village and Thirukkanoor village of Merkanam firka, Devanandal village of Kiliyannur firka of Tindivanam taluk, South Arcot district, with pathways to burial grounds?

THE HON. SRI P. KAKKAN : Administrative sanction has been accorded for acquisition of land to an extent of 0·66 acre in Akshikadu village for provision of pathway from the Harijan colony to the burial ground and the Collector is taking up proceedings for acquiring the site.

In respect of other Harijan colonies the question of acquisition of land required for providing pathway is under the consideration of the Collector of South Arcot.

SRI S. NAGARAJA MONIGAR : தற்போதைய நிலையில் ஹரிஜனங்களுக்கும், மற்றவர்களுக்கும் தனித்தனி சுடுகாடுகள் இல்லாமல் பொது சுடுகாடு ஏற்படுத்தக்கூடிய நிலைமையில் நாம் இருக்கிறோமா ? அப்படி முன்னேற முடியுமா என்று கேட்கிறேன் ?

THE HON. SRI P. KAKKAN : இப்போது இருக்கிற விதிப்படி ஒருவர் சுடுகாட்டில் இன்னொருவர் புதைக்கக் கூடாது என்று கிடையாது. ஆகையால் அப்படிச் செய்யலாம்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : உழைத்து உருக்குலைந்து போகும் ஆதி-திராவிட மக்களுக்கு சுடுகாடு இல்லை, சுடுகாட்டுக்குப் போகும் பாதை இல்லை என்று சொல்வது நமது அரசியலுக்கு கேவலத்தை உண்டு பண்ணுதா? இதை உடனடியாக நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை ஒரு சர்வே செய்து எடுத்துக் கொள்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வதை நான் நன்றாக உணர்கிறேன். அதனால்தான் எங்கே